Registered as a Newspaper

பக்கங்கள் 12

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 38
கதிர் : 205

திங்கட்கிழமை 19 ஜூன் 2023

ஆனி 04 ஆம் ந... 2054



## எரிபொருள் தட்டுப்பாடு வெறும் புரளி

காஞ்சன காட்டம்

கொழும்பு, ஜூன் 19

நாட்டில் எவ்வித எரிபொருளுக்கும் தட்டுப்பாடு இல்லை என »11

## நயினை நாகபூஷணிக்கு இன்று கொடி

விரிவு:- பக்.03

## அத்தியாவசிய பொருளாகியது கோதுமை மா

கொழும்பு, ஜூன் 19

கோதுமை மா அத்தியாவசியப் பொருளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை »11

## தேர்தலுக்கு நிதிகோரி மீண்டும் கடிதமாம்!!!

கொழும்பு, ஜூன் 19

நாட்டின் பொருளாதாரம் சிறப்பாக உள்ளதாக அரசாங்கமே அறிக்கைகளை வெளியிடுவதால், உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கான நிதியை விடுவிக்கக்கோரி திறைசேரிச் செயலருக்கு மீண்டும் கடிதம் அனுப்பவுள்ளதாகத் »11

குருந்தூர்மலைக்கு



# கம்மன்பில வருவதால் தமிழர் அஞ்சி அடங்கார்!

தமிழ்த் தலைவர்கள் கருத்து

யாழ்ப்பாணம், ஜூன் 19

முல்லைத்தீவில் அமைந்துள்ள குருந்தூர்மலைக்கு சிங்கள கடும்போக்குவாதியான நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில வருவதால் தமிழ் மக்கள் அஞ்சி ஒடுங்கமாட்டார்கள். அவர் இங்கு வருவது சிங்கள இனவாதத்தைக் கிளப்புவதற்கே. தெற்கில் சரிந்துபோயுள்ள வாக்கு வங்கியை அதிகரிக்கவே அவர் இங்கு வருகின்றார் – இவ்வாறு தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் 'உதயனுக்கு' தெரிவித்தனர். »11

13 ஐ நடைமுறைப்படுத்த

## ரணிலுக்கு அழுத்தம் கொடுக்க பிரதமர் மோடியிடம் கோரிக்கை

கடிதம் எழுதும் படலம்

தமிழ்க் கட்சிகளால் மீண்டும் ஆரம்பம்

வவுனியா, ஜூன் 19

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்குப் பயணம் செய்யும்போது, தமிழர் விவகாரம் தொடர்பில் இந்தியப் பிரதமர்மூலம் அழுத்தம் கொடுக்கும் நகர்வை மேற்கொள்வதென ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி தீர்மானித்துள்ளது.

வவுனியாவில் நேற்று நடந்த அந்தக் கட்சியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. »10

பூநகரியில்

## பற்றியெரிந்த படைமுகாம்

கிளிநொச்சி, ஜூன் 19

கிளிநொச்சி - பூநகரி, முக்கொம்பன் சின்னப்பல்லவராயன்கட்டுப் பகுதியில் உள்ள இராணுவ முகாமில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை தீப்பரவல் ஏற்பட்டது. »11

## தங்க இறக்குமதி தடையை நீக்குக

நகை உற்பத்தியாளர் சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 19

அரசாங்கம் தங்க இறக்குமதி மீதான தடையை நீக்கவேண்டுமென இலங்கை நகை உற்பத்தியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் இலங்கை நகை உற்பத்தியாளர் சங்கத்தின் பொருளாளர் »11



## இனப்பிரச்சினைக்கான தீர்வை நான் மட்டும் வழங்கமுடியாது!

நழுவுகிறார் ஜனாதிபதி ரணில்

கொழும்பு, ஜூன் 19

நிறைவேற்று அதிகாரம் இருக்கின்றது என்பதற்காக நான் ஆளும் தரப்பு பங்காளிகளுடனும், எதிரணியிலுள்ள கட்சிகளுடனும் கலந்து பேசாமல் எந்தத் தீர்மானத்தையும் எடுக்கமுடியாது. அரசியல் தீர்வு விவகாரம் சுலபமான விடயம் அல்ல. அதை ரணில் »11

## கூட்டணிக்குத் தலைவர் இல்லை இணைத்தலைவர்கள்தான்

வவுனியா, ஜூன் 19

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணிக்குத் தலைவராக ஒருவரைத் தெரிவு செய்வதற்குப் பதிலாக கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்கள் அனைவரையும் இணைத்தலைவர்களாக நியமிக்க அந்தக்கட்சி நேற்று முடிவெடுத்துள்ளது. அந்தக் கட்சியின் நிறைவேற்றுக் குழுக் »11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழர்களைத் தவறான பாதைக்கு கொண்டு சென்றாராம் பிரபாகரன்

## மேதானந்த தேரர் கண்டுபிடிப்பு

**கொழும்பு, ஜூன் 19**

**வடக்கு - கிழக்கிலுள்ள தமிழ் அரசியல்வாதிகளும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் போன்றே தமிழ் மக்களை மீண்டும் தவறான பாதைக்கு கொண்டு செல்கின்றார்கள் என்று தொல்பொருள் ஆய்வாளர் கலாநிதி எல்லாவல மேதானந்த தேரர் குற்றஞ்சாட்டியுள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புராதன பௌத்த விகாரைகளுக்குச் சொந்தமான காணிகளில் மக்களை குடியேற்றுவதற்காக தமிழ்த் தலைவர்கள் தவறான நடவடிக்கைகளை முன்னெடுத்துவரும் நிலையில் அதற்கு இணக்கம் வெளியிட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பெரும் பாவத்தை செய்யக்கூடாது. குருந்தூர், திரியாய ஆகிய விகாரைகளுக்குச் சொந்தமான காணிகளில் பௌத்தர்கள் அல்லாதவர்களை குடியேற்றுவதற்கு இடமளிக்கமுடியாது. நான் குருந்தூர்மலைக்கு நேரடியாக விஜயம் செய்துள்ளேன். அங்கு வரலாற்றில் பல தம்மபத வழிபாடுகள் நடைபெற்றுள்ளன. ஆகவே, அந்த புராதன விகாரைக்குச் சொந்தமான பெருமளவிலான நிலங்கள் காணப்படாமல் அவ்விதமான வழிபாடுகளைச் செய்யமுடியாது. மேலும், புராதனச் சின்னங்களை பாதுகாக்க வேண்டியது மிகவும் முக்கியமானது. அந்தச் சின்னங்கள் உலக மரபுரிமைகளாக மதிக்கப்பட வேண்டியவை. அவ்வாறான நிலையில், குருந்தூர்மலையைச் சூழவுள்ள நிலங்களை தமிழ் மக்களுக்கு வழங்குவது பொருத்தமற்ற செயற்பாடாகும். அதனை வழங்காதிருப்பது தான் மிகச்சரியான விடயமாகும். போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்குவதை நாம் எதிர்க்கவில்லை. நான் கூட அந்த மக்களை நேரில் சென்று பார்த்து உதவிகளை வழங்கியதில் ஒருவர்தான். ஆனால், அவர்களுக்கு காணிகள் தேவையாக இருந்தால் பிறிதொரு இடத்தில் வழங்க முடியும். அதற்குரிய வசதிகளும் முல்லைத்தீவில் காணப்படுகின்றன. உண்மையில் குருந்தூர்மலையை சூழவுள்ள காணிகளை தமிழ் மக்கள் கோரவில்லை, அதனைக் கோருவது தமிழ் அரசியல்வாதிகள்தான். இவர்கள்தான் திரியாய் விகாரைக்குச் சொந்தமான காணிகளையும் கோருகின்றார்கள். திரியாயும் புத்த பெருமானுடன் நேரடியாக தொடர்புபட்ட வரலாற்றுப் பிரதேசமாகும் - என்றார். (ம)



## ஜனாதிபதி ரணில் சீனாவுக்குப் பயணம்

கொழும்பு, ஜூன் 19

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஜூலை மாதம் 21ஆம் திகதி இந்தியாவுக்குச் செல்கின்ற நிலையில், இந்த வருடத்தில் அவர் சீனாவுக்கும் பயணம் மேற்கொள்ளவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இதன்படி எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்தில் அவர் சீனாவுக்குப் பயணமாகவுள்ளார் என்றும், சீன ஜனாதிபதி ஜின் பிங்குடன் ரணில் விக்கிரமசிங்க பேச்சு நடத்தவும் இருதரப்புத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. நாடாளுமன்றத்தால் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டு சரியாக ஒருவருடத்துக்குப் பின்னர் இந்தியாவின் அழைப்பை ஏற்று அவர் அங்கு செல்கிறார்.

முன்னராகவே, அவருக்கு அழைப்பு விடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டபோதும், ஒருவருடத்தின் பின்னரே அந்த வாய்ப்பு கிட்டியுள்ளது. இந்தியா - இலங்கைக்கு பொருளாதார நெருக்கடிக்கு சர்வதேச நாணய நிதியத்தைக் காட்டிலும் அதிக பங்களிப்பை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## மாணவர்கள் தற்கொலைகளுக்கு கற்றலில் அழுத்தமும் காரணம்

கொழும்பு, ஜூன் 19

பல்கலைக்கழகச் சூழலில் காணப்படும் சில அடக்குமுறை நிலைமைகள் மற்றும் கற்றல் அழுத்தங்கள் காரணமாகவே பல மாணவர்கள் தவறான முடிவெடுத்து உயிரிழக்கின்றனர் என்று பிரபல உளவியலாளர் ரூமி ரூபன் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக பல்கலைக்கழக மாணவர்கள் தவறான முடிவெடுத்து உயிரிழப்பது அதிகரித்துள்ள நிலையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பல்கலைக்கழகங்களில் கற்றல் செயல்முறை அழுத்தம் அதிகரிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. மன அழுத்தம், மனஉளைச்சல் போன்ற காரணங்களால் மாணவர்கள் இத்தகைய துரதிர்ஷ்டவசமான நிலைக்கு ஆளாக நேரிடும்.

மேலும், பொருளாதார அழுத்தம், மனச்சோர்வு போன்ற காரணங்களும் இந்த நிலையை மோசமாக்கும்.

பல மாணவர்கள் வீடுகளைவிட்டு வெளியேறி விடுதிகளில் தனிமையில் இருப்பதால் மன உளைச்சலுக்கு உள்ளாகின்றனர் - என்றார். (ம)

## உண்மை நல்லிணக்கக் குழுவின் வரைவு பகிரங்கப்படுத்தப்படும்!

### நீதி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 19

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுடைய வரைவின் இறுதிவடிவம் அடுத்தமாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் இராஜதந்திர சமூகத்துடனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும் அதன் விடயங்கள் பகிர்ந்து கொள்ளப்படும் என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான வரைவுக்கு நாடாளுமன்ற ஒப்புதல் கிடைத்தவுடன், டிசெம்பருக்குள் அது செயற்பாட்டுக்கு வரும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)



## குடும்பத்தலைவர் படுகொலை தலைமறைவான மூவர் கைது

மன்னார், ஜூன் 19

மன்னார்- அச்சங்குளத்தில் இளம் குடும்பத் தலைவர் கும்பலொன்றின் வாள்வெட்டுக்கு இலக்காகி நேற்றுமுன்தினம் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் மேலும் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் ஒருவர் நேற்றுமுன்தினமே கைதுசெய்யப்பட்ட நிலையில் மூவர் தலைமறைவாகியிருந்தனர்.

இந்தநிலையில் தலைமறைவாகிய மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என முருங்கன் பொலிஸார் தெரிவித்தனர். இறந்தவரின் உடல் மேலதிக உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ச-213)

## நாய்கள் அவதானம்

இலங்கையில் நாய்க் குட்டிகளிடத்தில் ஒருவித வைரஸ் தொற்று பரவுகின்றது என்றும் குறிப்பாக மத்திய மாகாணத்தில் இந்தப் பரவல் தீவிரம் பெற்றுள்ளது என்றும் எச்சரிக்கப் பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட நாய்க்குட்டிகள் சுவாசிப்பதில் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளன. ஜேமன் ஷெப்பேட், லப்டடோர், பொம்னேரியன் வகை நாய்களே இந்த வைரஸ் தொற்றால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன. (ம)

## தேர்தலில் வென்றுகாட்டினால் ரணிலுடன் இணையத் தயார்!

### திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 19

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் வென்று வந்தால், அவருடன் இணைந்து செயற்படுவதில் எந்தச் சிக்கலும் இல்லை. மக்கள் ஆணை இல்லாத நிலையில் அவருடன் இணைந்து செயற்பட முடியாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இணைந்து செயற்படுவதற்கு ஜனாதிபதி பல சந்தர்ப்பங்களிலும் அழைப்பு விடுத்துள்ளபோதிலும், அவ்வாறு செயற்படமுடியாத சூழலே தற்போது காணப்படுகிறது.

காரணம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது பொதுஜன பெரமுனவினருடனேயே இணைந்து பயணித்துக்கொண்டிருக்கிறார். அவர்களே நாட்டை வங்குரோத்தடையச் செய்தவர்களாவர். அவ்வாறானவர்களுடன் இணைந்தால் அது ராஜபக்சக்களை வீட்டுக்கு அனுப்பிய போராட்டக்காரர்களுக்கு இழைக்கப்படும் துரோகம் ஆகும்.

நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டால், நாம் நிச்சயம் வெற்றி பெறுவோம். அவ்வாறு வெற்றிபெற்றதன் பின்னர் ஜனாதிபதியுடனேயே இணைந்து பணியாற்ற நேரிடும். அதில் எந்தவிதச் சிக்கலும் இல்லை, அது அரசமைப்பு ரீதியான விடயமாகும்.


அவ்வாறன்றி, தற்போது சென்று அமைச்சுப் பதவிகளை ஏற்று, அரசாங்கத்தின் பங்காளிகளாக நாம் விரும்பவில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசமைப்பு ரீதியில் நியமிக்கப்பட்டுள்ளார் என்பதை ஏற்றுக்கொள்கின்றோம்.

ஆனால், அது மக்கள் ஆணையல்ல. மக்கள் ஆணை அற்ற ஆட்சியாளர்களுடன் எவ்வாறு இணைந்து பணியாற்ற முடியும்? - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நயினை நாகபூஷணியின் திருவிழா இன்று ஆரம்பம்

## ஆலய புனிதத்தைப் பேணுமாறு அறங்காவலர் சபை அறிவுறுத்து



யாழ்ப்பாணம், ஜூன் 19

**வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய பெருந்திருவிழா இன்று ஆரம்பமாக வுள்ள நிலையில், ஆலயத்துக்கு வரு கைதருவோர் ஆலயத்தின் புனிதத்தைக் காக்கவேண்டும் என ஆலய அறங்காவ லர் சபையினர் அறிவுறுத்தியுள்ளனர்.**

திருவிழா தொடர்பில் ஆலய அறங்காவலர் சபையினர் தெரிவித்ததாவது:-

ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் வருடாந்த உற்சவம் இன்று திங்கட்கிழமை கொடியேற் றத்துடன் ஆரம்பமாகின்றது. எதிர்வரும் ஜூலை மாதம் 4 ஆம் திகதி தெப்போற்சவத் துடன் நிறைவுபெறுகிறது. இந்தக் காலப்பகுதியில் அம் பாளைத் தரிசிக்கவரும் அடி யார்கள் ஆலயத்தின் புனிதத் தன்மையைப் பேணிக்காக்க வேண்டும்.

ஆலய வளாகத்தில் பாதணி களுடன் செல்லுதல் மற்றும் உலாவுதல் ஆகாது. அடியார் கள் ஆபரணங்கள் அணிந்து வருவதைத் தவிர்ப்பது நன்று. பெண்கள் தமிழ்ப்பண்பாட்டு கலாசார நடைமுறைகளைப் பின்பற்றவேண்டும். ஆண் கள் மேற்சட்டை அணிந்து வருகை தருவது தடைசெய் யப்பட்டுள்ளது. ஆலய மற் றும் உள்வீதியில் தொலை பேசிப் பாவனை, ஒளிப்படங் கள், ஒளிப்பதிவுகள் செய்தல் என்பன முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. அத்து டன் நயினாதீவில் தற்காலிக பொலிஸ் நிலையம் மற்றும் நடமாடும் நீதிமன்றம் என்பன வும் அமைக்கப்படவுள்ளன - என்றனர். (ச-125)

# ஊடக ஒடுக்குமுறையை ஒருபோதும் ஏற்கோம்!

## முஜிபுர் எதிர்ப்பு

கொழும்பு, ஜூன் 19

ஊடகங்களைக் கையகப்படுத்தும் செயற்பாட்டுக்கும், மக்களின் கருத் துரிமைக்கு எதிராகவும் ரணில் விக்கி ரமசிங்க தலைமையிலான அரசாங் கம் மேற்கொள்ளும் முயற்சிகளை எதிர்ப்போம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரகுமான் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரி வித்ததாவது:-

பழங்குடி மக்கள் வாழ்ந்ததை போன்ற முறைமையொன்றை உருவாக்குவ தற்காகவே ராஜபக்ச குழுக்களுடன் இணைந்து ரணில் விக்கிரமசிங்க செயற்படுகிறார்- என்றார். (ம)

# பொய்களை பரப்புரை செய்ய ஊடக அடக்குமுறைச் சட்டம்

## இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு


யாழ்ப்பாணம், ஜூன் 19

ஊடகங்களிலே வெளிவருகின்ற உண்மையான நிலையை மாற்றியமைத்து பொய்யான தகவல்களை மக் களிடம் கொண்டு சேர்ப்பதற்கு ஊடக அடக்குமுறைச் சட் டத்தை அரசாங்கம் கொண்டு வருகின்றது என மலையக மக்கள் முன்னணியின் தலைவர் வே. இராதாகிருஷ்ணன் யாழ்ப்பாணத்தில் வைத்து தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

மொட்டுக் கட்சியின் அனுசரணையோடு ஆட்சிப்பீடம் ஏறிய ரணில் விக்கிரமசிங்க இன்று செய்வதறியாது தடுமா றுகிறார். அரசாங்கத்திலே உள்ளேயும் குழப்பம். மொட்டுக் கட்சிக்குள்ளேயும் குழப்பம். நிரந்தரமில்லாத- ஸ்திரமற்ற அரசியல் சூழ்நிலை உருவாகியுள்ளது. இந்த ஸ்திரமற்ற தன்மையை ஏற்படுத்தியுள்ள ஜனாதிபதி அதை மாற்றிய மைப்பதற்கு அதிகாரத்தைப் பாவித்து வருகிறார். ஊடகங் களை ஒடுக்க முயற்சிக்கிறார் - என்றார். (ச-26)

# கட்டுப்பாட்டு விலைமீறல்; தண்டம் ரூ.100,000!



மன்னார், ஜூன் 19

மன்னாரில் முட்டை உள்ளிட்ட பொருள்களை கட்டுப்பாட்டு விலையை மீறி விற்பனை செய்த மூன்று வர்த்தகர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபா தண்டம் விதித்து தீர்ப்பிட்டுள்ளது மன்னார் நீதிமன்றம்.

மன்னார் நகர்ப்பகுதியில் நுகர்வோர் அபிவிருத்தி அதிகாரசபை யினர் கடந்த வியாழக்கிழமை திடீர் சோதனை மேற்கொண்டனர். சோதனையில் முட்டை மற்றும் கீரிச்சம்பா உள்ளிட்ட பொருள் களைக் கட்டுப்பாட்டு விலையை மீறி விற்பனை செய்த மூன்று வர்த்தகர்கள் சிக்கினர். அவர்களுக்கு எதிராக வழக்குப் பதிவுசெய்து மன்னார் நீதிமன்றில் கடந்த வெள்ளிக்கிழமை முற்படுத்தப்பட்ட நிலையில், குற்றத்தை அவர்கள் ஒப்புக்கொண்டனர். அதற்கமைய மூவருக்கும் தலா ஒரு இலட்சம் ரூபா தண்டம் விதித்து நீதிமன்று தீர்ப்பளித்துள்ளது. (ச-56)

# கதிர்காம பயணப்பூசை

யாழ்ப்பாணம், ஜூன் 19


கதிர்காமம் கொடியேற் றத்தை முன்னிட்டு தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆல யத்திலிருந்து வேல் அனுப்பும் பயணப் பூசை இன்று திங்கட் கிழமை மாலை 6 மணிக்கு இடம்பெற வுள்ளது. (ச-26)




**மு**ச்சா ஏத்தின பட்டம் பட்டெண்டு முச்சை அறுத்துக்கொண்டு போனமாதிரி திருகோண மலையில முழுசிக்கொண்டிருக்கிறாராம் சம்பந்த மானவருக்கு 'குகனாக' இருந்த 'தாசனார்'. முதலும் அவரைப் பற்றி பட்சி உங்களுக்குச் சொல்லியிருக்கும். ஆள், சம்பந்தமானவருக்கே சவால் விடுகிற மாதிரி செய்த வேலையளால இப்ப அவரின்ர இடத்துக்கு இன்னொரு ஆளைப் போட்டிருக்கு. தாசனார் சம்பந்தரின்ர கைத்தடியா அங்க நடக்கிற நிகழ்வுகளுக்கு போய்வரேக்க, வாய்மொழியாத்தான் 'எனக்குப் பதிலா இவரை அனுப்பிறன்' எண்டு சம்பந்தமானவர் அந்த நிகழ்வு நடத்திறவையிட்ட சொல்லிவிடுறவர். ஆனால் புதுசாப் போட்டிருக்கிறவருக்கு 'என்ர உத்தி யோகபூர்வ பிரதிநிதி' எண்டு கடிதமும் எழுதிக் குடுத்ததுதான் தாசனாருக்கு புகைச்சலக் கிளப்பி யிருக்காம்.

'ஏதோ கோபத்தில தன்னைக் 'கைத்தடி' பொறுப்பில இருந்து நிப்பாட்டிப் போட்டார், கோபம் தணியக் கூப்பிடுவார், திரும்பவும் கைத்தடியா மாறி கலக்கலாம்' எண்டுதான் தாசனார் நினைச் சுக் கொண்டிருந்தவர். ஆனால் இப்ப தனக்கே தராத கடிதத்தைப் புதுக் கைத்தடிக்கு குடுத்ததால, இனிமேல் தான் சம்பந்தமானவரின்ர கைத்தடியா வரவே ஏலாது எண்டது தாசனாருக்கு விளங்கிட் டுது. அப்பிடி சம்பந்தமானவரின்ர கைத்தடியா இருக்கிறது அவ்வளவு பெருமையான விசயமோ? விசயம் அதில்லை. இப்ப சம்பந்தமானவருக்கு கைத்தடியா இருந்தாத்தான் அவரில்லாக் காலத் தில அவற்றை இடத்தைப் பிடிக்கக் கூடியதா இருக்கும். அதாலதான் தாசனார் தான் கனடாவால வந்த தில இருந்து தனக்கு வேண்டப்பட்டவையை வட் டாரங்களில போட்டு, சில வேலைத்திட்டங்களை யும் செய்துவைச்சவர். ஆனால் எல்லாமே இப்ப வீணாப்போன கவலையில, சம்பந்தமானவரின்ர கைத்தடியா திரும்ப வாறதுக்கு தலையால கிடங்கு வெட்டாத குறையா தீயா வேலை செய்யத் தொடங்கியிருக்கிறார். ஆனால் உள்ளூரில அவருக்காக சம்பந்தமானவரிட்ட தூது போறதுக்கும் ஒருத்தரும் ரெடியில்லை. தாசனாருக்காக தூது போய், கடைசியில தங்கட காத்தும் பிடுங்குப்பட்டி டுமோ எண்ட பயம் தான் அதுக்குக் காரணம்.

அதால தாசனார், கனடாவில உள்ள கட்சிக்கார ரிட்ட புலம்பியிருக்கிறாராம். வீட்டுக் கட்சியின்ர செலவுதானங்களுக்கு கனடாக்கிளைதான் காசை அள்ளிக் குடுக்கிறது. அதால அவை சொன் னால் சம்பந்தமானவர் கொஞ்சம் காது குடுத்துக் கேப்பார் எண்டது தாசனாரின்ர கணக்கு. கனடாக் கிளைக்காரரும், எல்லாருக்கும் ஈ-மெயில் போட்டு தாசனாரை திரும்பக் கைத்தடியாக்க வேணுமெண்டு ஒற்றைக்காலில நிக்கினமாம். ஆனால் அதைச் சம்பந்தமானவர் கண்டுகொள்ள வேயில்லையாம். கைக்கு வரமுதலே நெய்க்கு விலை பேசி கண்டபடி ஆட்டம் போட்டால், இப்பிடித்தான் கடைசியில எல்லாம் கவிண்டு கொட்டுண்டு போகும்.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேசப் பாடசாலைகளை கண்காணிக்கத் தனிப்பிரிவு!

கொழும்பு, ஜூன் 19
சர்வதேசப் பாடசாலைகள் தொடர்பில் செயற்படுவதற்கும் அவை தொடர்பான கண்காணிப்பு மற்றும் ஒழுங்குபடுத்தல்களுக்கும் கல்வி அமைச்சில் விசேட பிரிவொன்றை அமைப்பதற்கு கல்வித் துறைசார் மேற்பார்வைக் குழுவில் முன்மொழியப்பட்டுள்ளது.
கல்வித் துறைசார் மேற்பார்வைக் குழு, அதன் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தலைமையில் நாடாளுமன்ற வளாகத்தில் அண்மையில் கூடியது.
இலங்கையில் செயற்படும் சர்வதேசப் பாடசாலைகள் தொடர்பிலும், அந்தப் பாடசாலைகள் மூலம் மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வி மற்றும் அதன் தரம் என்பவற்றை அதிகரிப்பது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.
அத்துடன், குறித்த பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் உரிமைகள் தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டுள்ளது.
இதேவேளை- ஆசிரியர் இடமாற்றம் மற்றும் கல்வி ஆலோசனை சேவையில் நிலவும் சிக்கல்கள் குறித்து ஆராயப்பட்டுள்ளதுடன், அந்தச் சிக்கல்களை தீர்ப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்குமாறு குழுவின் தலைவரால் கல்வி அமைச்சின் அதிகாரிகளுக்கு ஆலோசனைகளும் வழங்கப்பட்டுள்ளன. (ம)

# தன்னலம் துறப்போரே மக்கள் சேவையாளர்!

*நவரட்ணம் அடிகளார் சுட்டிக்காட்டு*



மன்னார், ஜூன் 19
மக்களுக்காக சேவையாற்றுவோர் பெரும் பணி செய்யாவிடினும் சிறுசிறு பணிகளைச் சிறப்புறச் செய்ய வேண்டும். அவர்கள் தன்னலமற்று பொது நலம்கருதி செயற்படவேண்டும் என மன்னார் மாவட்ட துயர் துடைப்பு மறுவாழ்வு சங்கத்தின் தலைவர் அருட்பணி ரி.நவரட்ணம் அடிகளார் தெரிவித்துள்ளார்.
மன்னார் மாவட்ட துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்கத்தின் 25ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாட்டில் என்ன பிரச்சினைகள் தலைதூக்கி இடம்பெற்றுக்கொண்டிருந்தாலும் அடுத்த ஜனாதிபதி யார்? ஆட்சியைக் கைப்பற்றுவது யார்? என்ற நிலைமையே மேலோங்கிக் காணப்படுகிறது.
மக்கள் தொண்டர்கள் தங்கள் பதவி ஆசைகளைத் தூரத்தில் வைக்க வேண்டும். மக்களுக்குச் சேவையாற்ற வந்தவர்கள்- மக்கள் பணியாளன் என்ற சிந்தனையில் செயலாற்றவேண்டும். பெரும் பணி செய்யாவிடினும் சிறுசிறு பணிகளையாவது செய்து மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டும்- என்றார். (ச-60)



# வடக்கில் மழை

யாழ்ப்பாணம், ஜூன் 19
வடக்குமாகாணம் உட்பட நாட்டின் சில பகுதிகளில் இன்று மழைக்கு வாய்ப்புள்ளது என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.
இதுதொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள அறிவிப்பில் மேலும் உள்ளதாவது:-
மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி, மாத்தறை, கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களில் சில இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.
இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும்வீசக்கூடும். மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களைக் குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள் - என்றுள்ளது. (ம)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். எதிர்பாராத ஆதாயம் கிடைக்கும். நண்பர்களால் காரியங்களில் அனுகூலம் உண்டாகும்.

**இடபம்:** தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். பிரச்சினைகள் ஏற்படக்கூடும். கவனமாக இருக்கவும். சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

**மிதுனம் :** அனுகூலமான நாளாக இருக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியக்கூடும். ஆதாயம் கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத பண வரவும் பொருள்சேர்க்கை உண்டு.

**கடகம்** எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகளில் ஈடுபட உகந்த நாள். செலவுகள் ஏற்படும். இளைய சகோதர வகையில் ஆதாயம் உண்டாகும்.

**சிம்மம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். முடிவுகள் எதுவும் இன்றைக்கு எடுக்கவேண்டாம். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும்.

**கன்னி:** எந்த முடிவையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. குடும்பத்தில் மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்லவும். சிறுசிறு பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**துலாம்:** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகள் உதவிகரமாக இருப்பார்கள். ஆஞ்சநேயர் வழிபாடு நன்மைகளை அதிகரிக்கச் செய்யும்.

**விருச்சிகம் :** புதிய முயற்சிகளுக்கு மிகவும் அனுகூலமான நாள். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வர். உறவுகளால் எதிர்பாராத ஆதாயம் ஏற்படும்.

**தனுசு:** அலைச்சலுடன் ஆதாயமும் இருக்கும். முடிவுகளைத் தவிர்க்கவும். சிலருக்கு திடீர் பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரத்தில் இலாபம் கூடுதலாக இருக்கும்.

**மகரம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். பிள்ளைகளால் ஏற்பட்ட பிரச்சினைகள் நீங்கும். செலவுகளைச் சமாளிக்கத் தேவையான பணம் இருக்கும்.

**கும்பம்:** மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்படும். அன்றாடப் பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. உறவுகளுக்காகச் செலவு செய்யவேண்டி இருக்கும்.

**மீனம்:** மனதில் அவ்வப்போது இனம் தெரியாத சஞ்சலங்கள் ஏற்பட்டு நீங்கும். செலவுகளை ஏற்படும். முக்கியமான முடிவு எடுப்பதைக் கண்டிப்பாகத் தவிர்த்துவிடவும்.

# வரிமோசடியில் சுற்றுலாவிகள்!

கொழும்பு, ஜூன் 19
சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வரும் அதிகமான வெளிநாட்டவர்கள், இலங்கையின் தெற்கு மற்றும் கிழக்குக் கரையோரங்களில், உள்நாட்டு வரி விலக்கு (நிபந்தனைகளுக்கு) அப்பால், சுதந்திரமாகத் தமது வணிகச் செயற்பாடுகளில் ஈடுபடுவதாகக் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.
இலங்கைக்குச் சுற்றுலாத்துறை மூலம் அதிகளவு வருவாயை ஈட்டுவதற்கு அண்மைக்காலமாக முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்படும் நிலையில், இந்தச் செயற்பாடு இலங்கைக்குக் கிடைக்க வேண்டிய வரிகளை இழக்கச் செய்கின்றது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம)

# புதிய நிர்வாகத்தெரிவு

மன்னார், ஜூன் 19
மன்னார் மாவட்ட துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்கத்தின் 25ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சங்கத்தின் தலைவர் அருட்பணி ரி.நவரட்ணம் அடிகளார் தலைமையில் இடம்பெற்றது.
புதிய நிர்வாகசபைத் தலைவராக அருட்பணி ரி.நவரட்ணம் அடிகளார், நான்கு சமயங்களிலிருந்தும் உப தலைவர்களாக எஸ்.எஸ்.இராமகிருஷ்ணன், ஜனாப்.எம்.எம்.சபூர்தீன், வண.விமலரத்னதேரர் மற்றும் அருட்பணி. எஸ்.மாக்கஸ் அடிகளார் ஆகியோரும் செயலாளராக எஸ்.ஏ.ராதா பெர்னாண்டோ, உபசெயலாளராக எஸ்.ஆசைநாயகம் றெவ்வல் பொருளாளராக ரி.மரியதாஸ், உபபொருளாளராக யூட் பிகிராடோ உள்ளடங்கலாக 22 பேர் தெரிவு செய்யப்பட்டனர். (ச-60)



# சேவல் சண்டை; ஏழு பேர் கைது

மட்டக்களப்பு, ஜூன் 19
மட்டக்களப்பு, வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவலடி பிரதேசத்தில் பணத்துக்காக சேவல் சண்டைச் சூதாட்டத்தில் ஈடுபட்ட 7 பேர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கைதுசெய்யப்பட்டனர்.
பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், நாவலடி பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் சேவல் சண்டை நடந்த பகுதியைச் சுற்றிவளைத்த பொலிஸார் ஏழு பேரைக் கைதுசெய்ததுடன், ஆறு சேவல்களையும் மீட்டனர். அத்துடன் அவர்களிடமிருந்து ஒரு தொகைப் பணமும் கைப்பற்றப்பட்டது. சந்தேகநபர்கள் 26 தொடக்கம் 30 வயதுடையவர்கள் என்றும் அவர்கள் அனைவரும் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# போர் முடிந்த பின்னர் வாள்வீசும் வீரசேகர!

'தமிழ் மக்களின் வாக்குகளால் நாடாளுமன்றத்துக்குத் தெரிவான தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தம்மைத் தெரிவுசெய்த மக்களுக்கு எந்த நன்மையையும் செய்யாது, தங்களின் அரசியல் இருப்பைத் தக்கவைப்பதற்காக இனவாதத்தையும் மதவாதத்தையும் வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றனர்' என்றாவாறாகத் திருவாய் மலர்ந்திருக்கின்றார் நாடாளுமன்ற உறுப்பினரும் கடற்படையின் முன்னாள் தளபதியுமான சரத் வீரசேகர. அணுவாயுதப் பரவல் குறித்து அமெரிக்கா கவலை கொள்வதைப்போன்றும், சர்வாதிகார ஆட்சிக்கெதிராக வடகொரியா குரல்கொடுப்பதைப்போன்றும் அமைந்திருக்கின்றது வீரசேகரவின் இந்த 'அதீத அக்கறையான' மனோநிலை.

ஆதலால், 'தமிழ் மக்களுக்கு, அவர்களால் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதுவும் செய்யவில்லை' என்ற 'கவலை' வீரசேகரவுக்கு வேண்டாம். அதைப்பற்றி அவர் பெரிதாக அலட்டிக்கொள்ள வேண்டிய எந்தத் தேவையும் இல்லை. அதைப்பற்றி அக்கறை கொள்ளவேண்டியவர்கள் தமிழ் மக்கள் மட்டுமே. ஆனால், தமிழ் மக்களின் அபிவிருத்திக்கு, தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களால் சொல்லிக் கொள்ளக்கூடியளவுக்கு பங்களிப்புச் செய்ய இயலவில்லை என்பது உண்மைதான். அதற்கும் மிகமுக்கியமான காரணம், ஒதுக்கீடுகளில் தமிழ் எம்.பி.க்கள் மீது பேரினவாத அரசாங்கம் காட்டும் ஓரவஞ்சனைதான். இந்தப் பஞ்சத்தின் நடுவிலும், ஆயிரம் விகாரைகளைக் கட்டியே தீருவேன் எனக் கங்கணம் கட்டி, அதற்காகப் பல பில்லியன் ரூபாக்களை செலவிடும் இந்த அரசாங்கம், போரால் வாழ்வு சிதைக்கப்பட்ட தமிழ்க் குடும்பங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கவோ, வாழ்வாதார உதவிகளை வழங்கவோ பின்னடித்தே வருகின்றது. அப்படியிருக்கையில் எப்படி தமிழ்நாடாளுமன்ற உறுப்பினர்களால் தமிழ் மக்களின் துயர் போக்கும் காரியங்களை முழுவீச்சில்செய்யமுடியும்?


இனவாதம் மட்டுமே தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் அரசியல் இருப்பு என்று தெரிவிக்கும் சரத் வீரசேகர, தன்னுடைய அரசியல் இருப்பாக எதைக் கொண்டிருக்கின்றார் என்ற புரிதலை முதலில் ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். தமிழர்களின் எந்தவொரு உரிமைப் போராட்டத்துக்கு எதிராகவும் முதன்முதலில் எதிர்ப்புக் குரல் எழுப்புபவர் இதே சரத் வீரசேகரவே. இனவாதமும் மதவாதமும் எப்போதெல்லாம் பேசுபொருளில்லாமல், தணிகின்ற நிலைக்குச் செல்ல முற்படுகின்றதோ, அப்போதெல்லாம் அந்தத் தீயில் பரல்பரலாக எண்ணெய்யை ஊற்றும் கைங்கரியமே வீரசேகரவின் அரசியல் வியூகமாக இருக்கின்றது. அப்படிப்பட்ட கடைந்தெடுத்த பேரினவாதியான வீரசேகரவுக்கு தமிழர்களின் உரிமைக்காக – அவர்களின் சுமுக வாழ்வுக்காக நியாயமான கோரிக்கைகளை – வலியுறுத்தல்களை முன்வைக்கும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்துக்களும் செயற்பாடுகளும் இனவாதமாகத்தான் தெரியும். அதற்காக எம் அரசியல் உரிமைகளை நாம் வலியுறுத்தாமல் இருந்துவிட முடியாது.

நிற்க, வீரசேகர உண்மையில் ஒரு சிறந்த அரசியல் தலைவரென்றால், 'பௌத்த – சிங்கள' சித்தாந்தத்தை நிலைநிறுத்தப் பாடுபடுகின்றவரென்றால், அரகலய போராட்டம் உச்சம் தொட்டிருந்த காலத்தில் ஏன் அவர் இருக்கும் இடம்கூடத் தெரியாமலிருந்தார்? நாட்டின் பொருளாதாரச் சிதில நிலைக்கு, எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க கொண்டுவந்த தனிச் சிங்களச் சட்டம்கூட ஒரு காரணம் என்று, அவரது நினைவாக அமைக்கப்பட்ட சிலையின் கண்களைக் கட்டிய சிங்கள இளைஞர்கள் 'இனியொரு விதிசெய்வோம்' என்று பயணப்பட்ட நாள்களில், 'தேள் கொட்டிய திருடன்'போல், மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் பரிதவித்த வீரசேகர, நாடு ஓரளவு இயல்புக்குத் திரும்பி – அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் ஆர்ப்பாட்டங்கள் யாவும் அடங்கி ஒய்ந்தபின்னர், சிறுபான்மை மக்களை வம்புக்கு இழுத்துக் கூப்பாடு போடுவதானது 'அற்பத்தன அரசியலின்' உச்சமின்றி-வேறில்லை.

அரகலய அதன் முழுவீச்சையும் கொண்டு பேரெழுச்சி பெற்றிருந்த காலத்தில், சிங்களச் சகோதரர்கள் இனவாத – மதவாத தலைவர்களுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்திருந்த அந்த இரவுகளில், தமிழர்களுக்குத் தாயகமில்லை என்றோ – தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சிறையிடுவேன் என்றோ வீரசேகர முழங்கியிருந்தால் அவர் ஓர் சுத்தவீரன்தான். ஆனால், எல்லாமே அதிகாரத்தால் அடக்கப்பட்ட பின்னர், சாரத்தை மடித்துக் கட்டிக் கொண்டு, தமிழர்களோடு சண்டித்தனத்துக்கு வருவதெல்லாம் அரசியல் ஆதாயத்துக்கான நடவடிக்கையே தவிர வேறொன்றுமில்லை.


## நாளொரு நல்வார்த்தை

"சூழ்நிலை நம்மை மாற்றக்கூடாது, நாம் தான் அந்தச் சூழ்நிலையை மாற்றவேண்டும்." –ஜாக்கிஜான்–



# 3000 குழந்தைகள் இருதயநோயுடன் பிறப்பு!

## மருத்துவர்கள் சுட்டிக்காட்டு



**கொழும்பு, ஜூன் 19**

**இலங்கையில் வருடாவருடம் 3 ஆயிரம் குழந்தைகள் இருதயம் தொடர்பான பிரச்சினைகளுடன் பிறக்கின்றன என்று கொழும்பு லேடி ரிட்ஜ்வே மருத்துவமனையின் குழந்தை இருதய நோய் நிபுணரும் ஆலோசகருமான மருத்துவர் துமிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.**

கொழும்பு லங்கா மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வருடாவருடம் 3 ஆயிரம் குழந்தைகள் இருதயம் தொடர்பான பிரச்சினைகளுடன் பிறக்கின்றன.

இவர்களில் ஆயிரத்து 500 குழந்தைகளுக்கு மட்டுமே ஒரு வருடத்துக்குள் சிகிச்சை அளிக்க எம்மால் முடிகிறது.

ஏனைய ஆயிரத்து 500 குழந்தைகளும் தமக்கான சிகிச்சைக்காகக் காத்திருக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன - என்றார். (ம)

# வளிமாசுபாடு தீவிரம் மக்களே அவதானம்!

## மருத்துவர்கள் எச்சரிக்கை

உலகின் ஏனைய பகுதிகளைப் போன்று இலங்கையிலும் வளிமாசடைவு அதிகரித்துள்ளது என்று கொழும்பு தேசிய மருத்துவமனையின் இருதயநோய் சிகிச்சை நிபுணர் மருத்துவர் அனிந்து பத்திரண தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நீண்டகாலமாக வளிமாசுபாடு ஒரு குறிப்பிடத்தக்க சுற்றுச்சூழல் அச்சுறுத்தலாகக் கருதப்பட்டது. இது தற்போது மனித ஆரோக்கியத்தில் தாக்கம் செலுத்துவதில் முன்னணியில் உள்ளது. வளி மாசு இருதய நோயை உருவாக்குவதில் முக்கியமான காரணியாக அடையாளம் காணப்பட்டுள்ளது. தரமற்ற வளியை சுவாசிக்கும்போது வளிமாசு நுரையீரல்கள் மற்றும் இருதயம் வழியாக குருதி ஓட்டத்தில் ஆழமாகச் செல்லும். இது இருதயம் மற்றும் குருதிச் சுற்றோட்ட நோய்களை உருவாக்கும் அபாயத்தை அதிகரிக்கும் - என்றார். (ம)

## நடத்துநரின்றி பேருந்துகள்!

இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்துகளை, அனைத்து அதிவேக நெடுஞ்சாலைகளிலும் நடத்துநர்களின்றி, ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் இயக்குவதற்கு போக்குவரத்து அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன்படி, பேருந்துகளின் பயணிகளுக்கு, பயணத்தின் ஆரம்பத்தில் மட்டுமே பயணச்சீட்டு வழங்கப்படும். (ம)

## நாளை

20.06.2023 செவ்வாய்க்கிழமை ஆனி 05

சுபநேரம் : 10.24 – 11.54

ராகுகாலம் : 02.54 – 04.24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற்சந்தை




யாழ்ப்பாணப் பிரதேச செயலகமும் மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களமும் இணைந்து நடத்திய தொழிற்சந்தை கடந்த 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ். பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.
மேற்படி தொழிற்சந்தையில் பெருமளவு இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டனர். (ய-66)

# தேனீ வளர்ப்பு பயிற்சி பட்டறை



யாழ். மாவட்ட விவசாயப் பிரிவினரால் சுயதொழிலை ஊக்குவிக்கும் நோக்கில் தேனீ வளர்ப்பு பயிற்சிப் பட்டறை யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் கடந்த 15ஆம் திகதி வியாழக்கிழமை மாவட்டச் செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தலைமையில் நடைபெற்றது.
இப் பயிற்சி பட்டறையில் 35 பயனாளிகளுக்கு தேனீ வளர்ப்பு முறை தொடர்பான விளக்கங்கள் கொடுக்கப்பட்டன.
எதிர்வரும் நாள்களில் தேன் உற்பத்திக்குத் தேவையான உபகரணங்களும் பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளது.
மேலும் கடந்த வாரம் யாழ். மாவட்ட விவசாயப் பிரிவு உத்தியோகத்தர்களால் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 19 பயனாளிகளுக்கு பயிற்சி பட்டறை முன்னெடுக்கப்பட்டது. (ம-ரி-125)



மானிப்பாய் - சாவல்கட்டு அந்திக்குழி ஞான வைரவர் ஆலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள 100 அடி உயரமான இராஜகோபுரத்துக்கான அடிக்கல் நடும் விழா கடந்த 15ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெற்றது.
ஆலய பிரதமகுரு தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், மாகாணசபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சாவல்கட்டு வட்டார அமைப்பாளர் ந.கவிச்சந்திரன் மற்றும் ஆலய நிர்வாகத்தினர் ஆகியோர் கலந்துகொண்டு இராஜகோபுரத்துக்கான அடிக்கல்லை நட்டு வைத்தனர். (ய-125)



கிளிநொச்சி மாவட்டத்தின் மூன்றாவது பெரியகுளமான கல்மடுக்குளத்தின் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ய-316)




# போஷாக்கு உணவு கையளிப்பு

மன்னார் மாவட்டத்தில் தெரிவாகி மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களின் போஷாக்கை அதிகரிக்கும் நோக்குடன் 'மன்னார் புனித ஆனாள் கல்வி மற்றும் சமூக அபிவிருத்தி சுவிஸ் குழு வங்காலை' அமைப்பின் ஊடாக போஷாக்கு உணவுப் பொருள்கள் கடந்த 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை வங்காலை புனித ஆனாள் தேசியக் கல்லூரி அதிபரிடம் கையளிக்கப்பட்டன.
இந்த நிகழ்வில் அமைப்பின் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டு பொருள்களைக் கையளித்தார்கள். (ய-60)



சர்வதேச குருதிக்கொடை தினத்தையொட்டி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலைப் பீடத்தைச் சேர்ந்த பொருளியல் துறையின் இளம்பொருளியலாளர் மன்றத்தால் குருதிக் கொடை முகாம் அண்மையில் நடத்தப்பட்டது. நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் இதில் கலந்துகொண்டு குருதியை வழங்கினர். (ச)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 29 . 06 . 1944



மறைவு 18 . 06 . 2023

## திரு. பொன்னையா பூபாலசிங்கம் (புகழானந்தம்)

யாழ். திருநெல்வேலி கிழக்கு, கேணியடியைப் பிறப்பிடமாகவும், வவுனியா மற்றும் கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. பொன்னையா பூபாலசிங்கம் (புகழானந்தம்) நேற்று (18.06.2023) ஞாயிற்றுக்கிழமை அவுஸ்திரேலியாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - பொன்னம்மா தம்பதிகளின் மகனும், நல்லையா - பரிபூரணம் தம்பதிகளின் அன்பு மருமகனும், பத்மினியின் அன்புக் கணவரும், சுஜீதரன் (வவுனியா), வினோதரன் (அவுஸ்திரேலியா), பிரகாசினி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், ரஜனி, விஜிதாரணி, சுரேந்திரன் ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் தங்கேஸ்வரி, சத்தியபாமா, புஸ்பராணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம், துரைச்சாமி, பஞ்சரட்ணம் மற்றும் ராஜசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், பிரதீஷ், டினுஷ், ஹரிஸ், சனோஸ், நிதீஸ், ஷகீஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**36/1, 10 ஆம் ஒழுங்கை,**
**வைரவ புளியங்குளம், வவுனியா.**

**தகவல்:**
**பூபாலசிங்கம் சுஜீதரன் (மகன்)**

**077 282 5138, 024 222 1833** (CS/50889)AH-1

# மரண அறிவித்தல்



## பழனி காந்தரூபன் (காந்தன்)

அனலை தீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட பழனி காந்தரூபன் (கா்ந்தன்) கடந்த (15.06.2023) வியாழக்கிழமை இரவு கனடா ஸ்காபரோவில் இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அன்லைதீவு பழனி மற்றும் சரஸ்வதி (கனடா) ஆகியோரின் அன்பு மகனும், கல்வயல் பெருங்குளம் முத்துமாரி அம்மன் கோவில் இரத்தினம் யோகநாதன் (யோகன்), கலாநிதி (நிதி) ஆகியோரின் அன்பு மருமகனும், சர்மிலாவின் (கனடா), அன்புக் கணவரும், லக்வினா (கனடா), பவீனா (கனடா), தனன் (கனடா), ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (19.06.2023) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணி முதல் 5.00 மணி வரை Lotus Funeral Hall 121 City view Toronto On M9W5A8 பார்வைக்கு வைக்கப்பட்டு பின்னர் இறுதிகிரியைகள் நடைபெற்று பிற்பகல் 6.00 மணிக்கு Lotus Funeral Hall 121 City view Toronto On M9W5A8 தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பெருங்குளம் பிள்ளையார் வீதி,**
**முத்துமாரி அம்மன் கோவில்,**
**கல்வயல், சாவகச்சேரி.**
**இலங்கை.**

(CR 40159)(K-1)

**தகவல்:**
**மாமன்**

# மரண அறிவித்தல்

தோற்றம் 07 . 03 . 1938



மறைவு 17 . 06 . 2023

## தர்மராசா சரஸ்வதி

யாழ்ப்பாணம், நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும், வராகி அம்மன் கோவிலடி, கொக்குவில் மேற்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மராசா சரஸ்வதி கடந்த (17.06.2023) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பர் - தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தர்மராசாவின் அன்பு மனைவியும், புவனேஸ்வரி, ஜெகதீஸ்வரி (வேபி - ஜேர்மனி), ஜெயசேகர் (பிரான்ஸ்), ஜெயவதனி (சுகந்தி), விஜயசேகர் (பிரான்ஸ்), தர்மசேகர் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயராணி (பிரான்ஸ்), அனுசியா (பிரான்ஸ்), எட்வொட் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், ரஜீபன் (ஜேர்மனி), நிரேஜி (பிரான்ஸ்), நிண்டா (பிரான்ஸ்), திபா (பிரான்ஸ்), தீசன் (பிரான்ஸ்), கஜித் (பிரான்ஸ்), ரவிதாஸ் (பிரான்ஸ்), விஸ்னு (பிரான்ஸ்), சதுஸ்ரிபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ரித்திஸ் (பிரான்ஸ்), அஜீஸ் (பிரான்ஸ்), அனீஸ் (பிரான்ஸ்), ஆதிரா (பிரான்ஸ்), டியா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.06.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**வராகி அம்மன் கோவில்,**
**கொக்குவில் மேற்கு.**

(CS/50890)AH-1

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 04 . 1936



மறைவு 15 . 06 . 2023

## அந்தோனி பிலிப்பையா

செம்பியன்பற்றைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனி பிலிப்பையா கடந்த (15.06.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனி - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை - மதலேனம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், ஞானசிகாமணியின் (கிளி) பாசமிகு கணவரும், மனோ (லண்டன்), மேரிகசிஸ்டா (சியாமிளா - முன்னாள் ஆசிரியை, இத்தாலி) வின் பாசமிகு தந்தையும், தயா (லண்டன்), யோசேப்ஸ்ரனிஸ் (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான நிக்லஸ், குணறட்ணம் மற்றும் மரியமலர், எலிசபேத்ராணி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான பவுலீனப்பு, அல்போண்ஸ், கிறிசாந்துஸ் ஆகியோரின் மைத்துனரும், துஸ்யந்தி, செறேனா, சியானா, ஆன்சியானி, டெறன்சியா, யூட் ஆகியோரின் அன்புப் பேரனும், செர்வின், லலேரியா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கத் திருப்பலி இன்று (19.06.2023) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு செம்பியன்பற்று புனித பிலிப்பு நேரியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு, சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**செம்பியன்பற்று வடக்கு,**
**செம்பியன்பற்று.**

(CS/50888)AH-1

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**மனோ (மகன்) - 0044 7951 804535, 074 028 6046**
**சியாமளா (மகள்) - 0039 32840 74273**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாள்கள் தேவை

அறிவியல் நகரில் இங்கும் ஹோட்டலுக்கு சமையல் (சைவம், அசைவம்). றொட்டி. றைஸ், தோசை தயாரிக்கத் தெரிந்த ஆண்கள் தேவை. தங்கி நின்று வேலை செய்பவர்கள் மட்டும்.

**076 672 5879, 071 010 4545**

(CS/50892)AH-1

## மணமகன் தேவை

1982 ரேவதி, கி.பா.7, BA பட்டதாரி அரச தொழில் புரியும் விவாகரத்து மணமகளுக்கு மணமகன் தேவை.

**077 5452 892**


# சாதா போதையுடன் சந்தேகநபர் கைது!

யாழ்., ஜூன் 19

மானிப்பாயில் 'சாதா' போதைப் பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

மானிப்பாய் பிரதான வீதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்ட 22 வயதுடைய சந்தேகநபரிடமிருந்து 15 கிராம் கஞ்சா கலந்த சாதா போதைப் பொருள் மீட்கப்பட்டது. மேலதிக விசாரணையின் பின் சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (ச-125)


## மணிவிழா வாழ்த்து

**19.06.2023**




### திருமதி புஷ்பலதா ஜெகநாதன்

(பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி ஆசிரியை - S.L.T.S. I)

**சேவை விபரம்**

யா/ ஒட்டுவெளி A.M.T.M. பாடசாலை : 17.08.1988 - 19.01.1992

யா/ கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கல்லூரி 20.01.1992 - 31.12.1993

யா/எழுதுமட்டுவாழ் ஸ்ரீகனேசா வித்தியாலயம் : 01.01.1994 - 02.01.2005

யா/மீசாலை கமலாம்பிகை வித்தியாலயம் 03.01.2005 - 03.06.2007

களு/ஜீலான் மத்திய கல்லூரி 04.06.2007 - 30.06.2008

யா/ மீசாலை கமலாம்பிகை வித்தியாலயம் 01.07.2008 - 08.02.2015

யா/ டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி 09.02.2015 - 19.06.2023

BEST wishes

கடந்த எட்டு வருடங்களாக எமது கல்லூரியில் மிகச் சிறப்பான அர்ப்பணமான சேவையாற்றி 60 ஆவது அகவையில் ஓய்வுபெற்றுச் செல்லும் ஆசிரியை **திருமதி புஷ்பலதா ஜெகநாதன்** அவர்களின் சேவை நயந்து வாழ்த்துவதுடன் அவரின் ஓய்வு காலம் சிறப்பாக அமையவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர்:
வட்டமேசை
யா/ டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி.

(CS/40145)AH-1

## கண்ணீர் அஞ்சலி



### விக்கினேஸ்வரன் அபிநயன்

ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக 3 ஆம்வருட பொறியியல் பீட மாணவன். நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறை.

எமது ஆலய பரிபாலனசபையின் நிர்வாக சபை உறுப்பினர் இரத்தினம் விக்கினேஸ்வரனின் புத்திரனும், கர்ணந்தோட்ட கந்தன் பால் பற்றுக் கொண்டவரும்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் தந்தை, தாய், சகோதரர் மற்றும் உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய முருகனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் :- 30.11.2000
மறைவு :- 16.06.2023

ஆலய பரிபாலனசபையினர்,
நாரந்தனை சரவணை கர்ணந் தோட்டம்,
ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி கோவில்

(CS/25284)AH-1

## கண்ணீர் அஞ்சலி

64ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் (1983) தலைவரும் முன்னாள் சுதேசிய நிர்வாக உறுப்பினருமான

### திரு.நடராசா வாமசிவன்



அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தோற்றம் 04.04.1949
மறைவு 16.06.2023

**104ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா நிர்வாகசபை.**

(CS 50893) K-1

## மணிவிழா வாழ்த்தும் சேவைநலன் பாராட்டும்




### திருமதி வாணி குணசிங்கம் - S.L.T.S. I

(பயிற்றப்பட்ட சித்திரக்கலை ஆசிரியர்)

எமது கல்லூரியில் அளப்பரிய சேவையாற்றி கடந்த (16.06.2023) வெள்ளிக்கிழமை ஓய்வுபெற்ற எமது சித்திரப்பாட ஆசிரியை திருமதி வாணி குணசிங்கம் அவர்களை மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**சேவைக்காலம்**

யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி - 22.03.1990 - 28.02.1993

யா / கச்சாய் மகா வித்தியாலயம் - 01.03.1993 - 13.02.2013 -

யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி 14.02.2013 - 16.06.2023

வாழ்த்துவோர்:
ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி.

(AH-1)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்ரைனின் எல்லைகளை அபகரிக்க ரஷ்யா முடிவு!

## செப்ரெம்பரில் தேர்தல்...




மொஸ்கோ, ஜூன் 19
உக்ரைனிடமிருந்து தான் கைப்பற்றிய எல்லைப்பகுதிகளை அபகரிப்பதற்கு ரஷ்யா கொள்கையளவில் முடிவெடுத்துள்ளது. இதற்காக, தான் கைப்பற்றிய பகுதிகளில் செப்ரெம்பரில் தேர்தலை நடத்தவும் ரஷ்யா திட்டமிட்டுள்ளது.
இதன்படி உக்ரைனிடமிருந்து முற்றாகக் கைப்பற்றப்பட்டு ரஷ்யாவின் பிடியில் உள்ள டொனெட்ஸ்க், லுஹான்க், கேர்சன், ஸபோரிஸ்ஸியா ஆகிய பகுதிகளிலேயே தேர்தல் நடத்தப்படவுள்ளது. செப்ரெம்பர் 10ஆம் திகதி டொனெட்ஸ்க், லுஹான்க், கேர்சன், ஸபோரிஸ்ஸியா பகுதிகளில் உள்ள மக்கள் ரஷ்யாவுடன் இணைவது தொடர்பான விருப்பு அவர்களிடம் கேட்கப்படும் என்று ரஷ்யத் தேர்தல்கள் ஆணையம் அறிவித்துள்ளது. (ம)

# பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துங்கள்

## ஐ.நா. மீண்டும் அழுத்தம்

கொழும்பு, ஜூன் 19
வலிந்து காணாமலாக்கப்படல் மற்றும் தன்னிச்சையான தடுத்துவைப்பு என்பவற்றை முடிவுக்குக் கொண்டு வருவதுடன் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துமாறு ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் உலகளாவிய காலாந்தர மதிப்பீடு தொடர்பான குழு இலங்கைக்குப் பரிந்துரைத்துள்ளது.
அத்துடன், அனைத்துவிதமான மனித உரிமை மீறல்கள் சம்பவங்கள் குறித்து இராணுவத்தினர் உள்ளிட்ட சகலதரப்பினரிடமும் சுயாதீனமானதும் பக்கச்சார்பற்றதுமான விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் வலியுறுத்தியுள்ளது.
அதுமாத்திரமன்றி இன, மதசிறுபான்மையினருக்கு எதிரான வெறுப்புணர்வுப்பேச்சு மற்றும் அடக்குமுறைகளைத் தடுப்பதற்கு ஏற்ற செயன்முறையொன்றை நிறுவுவதன் மூலம் தேசிய நல்லிணக்கம் தொடர்பான கொள்கையை மேலும் வலுப்படுத்துமாறும் அந்தக்குழு தெரிவித்துள்ளது.
ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் உலகளாவிய காலாந்தர மதிப்பீடு தொடர்பான குழுவானது இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் குறித்த மீளாய்வைக் கடந்த பெப்ரவரி மாதம் முதலாம் திகதி மேற்கொண்டிருந்தது. இம்மீளாய்வின்போது கண்டறியப்பட்ட விடயங்களையும், மனித உரிமைகள் பாதுகாப்பை முன்னிறுத்தி இலங்கை மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் பற்றிய பரிந்துரைகளையும் உள்ளடக்கிய 24 பக்க அறிக்கை வெளியாகியுள்ளது. அதிலேயே இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. (அ-ஒ,இ)

# பாப்பரசர் நலம்

உரோம், ஜூன் 19
சத்திரசிகிச்சை செய்துகொண்ட பாப்பரசர் முதலாம் பிரான்சிஸ் தற்போது நலமாக உள்ளார் என வத்திக்கான் தெரிவித்துள்ளது.
86 வயதான பாப்பரசர் முதலாம் பிரான்சிஸ் குடலிறக்கப் பாதிப்பால் அவதிப்பட்டு வந்தார்.
சிலதினங்களுக்கு முன்னர் அவருக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
தற்போது அவரின் உடல்நிலை சிறப்பாக உள்ளது என வத்திக்கான் தெரிவித்துள்ளது. (ச)

# அணு ஆயுதங்கள் ரெடி

## புடின் தெரிவிப்பு



மொஸ்கோ, ஜூன் 19
உக்ரைன் போரில் தேவைப்படும் போது பயன்படுத்துவதற்காக முதல் தொகுதி அணு ஆயுதங்கள் பெலாரஸுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என ரஷ்ய அதிபர் புடின் தெரிவித்துள்ளார்.
கடந்த ஓராண்டுக்கு மேலாக உக்ரைன் - ரஷ்யா போர் தொடர்கிறது. ரஷ்யாவின் தாக்குதல்களை உக்ரைன், தனது நட்பு நாடுகளின் உதவிகளோடு எதிர்கொண்டு வருகிறது. இந்தப் போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். போரை நிறுத்திவிட்டு இருநாடுகளும் அமைதி பேச்சுக்குத் திரும்ப வேண்டும் என்று உலகநாடுகள் வலியுறுத்துகின்றன.
இந்தநிலையில் உக்ரைன் போரில் தேவைப்படும்போது பயன்படுத்துவதற்காக முதற்தொகுதி அணு ஆயுதங்கள் பெலாரஸுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என ரஷ்ய அதிபர் புடின் தெரிவித்துள்ளார். (ச-இ)



வரணி சிட்டிபுரம் கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவத் தேர்த் திருவிழா கடந்த சனிக்கிழமை காலை இடம் பெற்றது. (ஓ-159)

# உகண்டாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். வெறித்தனம்

## 40 பேர் பலி!

ஹொங்கோ, ஜூன் 19
மேற்கு உகாண்டா ஹொங்கோ எல்லைக்கு அருகே உள்ள பாடசாலை ஒன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 40 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர்.
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புடன் தொடர்புடைய கிளர்ச்சிக் குழு இந்த வெறியாட்டத்தைப் புரிந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.
கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலானோர் மாணவர்கள் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
மாணவர்களில் சிலர் எரித்தும், வெட்டியும் கொல்லப்பட்டுள்ளனர். பின்னர் பாடசாலைக் கட்டடம் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.
மேலும் மாணவிகள் உட்பட சிலர் கிளர்ச்சியாளர்களால் கடத்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது. (ச-இ)



# அமெ. பெடரல் நீதிபதியாக முதல் இஸ்லாமியப் பெண்

வொஷிங்டன், ஜூன் 19
அமெரிக்கா பெடரல் நீதிபதியாக இஸ்லாமியப் பெண்ணை அமெரிக்க செனட் சபை நியமித்துள்ளது.
வங்கதேச வம்சாவளியைச் சேர்ந்தவரும் அமெரிக்காவில் குடியுரிமையைப் பெற்றவருமான 46 வயதான நுஸ்ரத் ஜஹான் சௌத்ரி என்பவரே நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.
செனட்டில் நடந்த வாக்கெடுப்பில் 49-50 என்ற வாக்கு வித்தியாசத்தில் நுஸ்ரத் சவுத்ரி தேர்வு செய்யப்பட்டார்.
இவர் நியூயோர்க்கின் கிழக்கு மாவட்டத்திலுள்ள புரூக்ளின் பெடரல் நீதிமன்றத்தில் நீதிபதியாகப் பணியாற்றுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# புதுக்குடியிருப்பு- தாராபுரம் பஸ் சேவை இடைநிறுத்தம்!

## மாணவர்கள் அந்தரிப்பு

மன்னார் கரிசலிலிருந்து புதுக்குடியிருப்பு, தாராபுரம் ஊடாக முன்னெடுக்கப்பட்டு, தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள பஸ் சேவையை மீள வும் முன்னெடுக்குமாறு மன்னார் அல் – அஸ்ஹர் ம.வி. தேசிய பாடசாலைச் சமூகம் கோரிக்கை விடுத்துள்ளது.
இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–
மன்னார் அல் – அஸ்ஹர் ம.வி. தேசிய பாடசாலை மாணவர்களுக்கென இ.போ.ச. போக்குவரத்துச் சேவை மன்னார் சாலை ஊடாக முன்னெடுக்கப்பட்டு வந்தது. இந்த பஸ் சேவை எவ்வித அறிவித்தலுமின்றி திடீரென இடைநிறுத்தப்பட்டுள்ளது. அதனால் பாடசாலை மாணவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.
குறித்த சேவை இடைநிறுத்தப்பட்டு ஒரு மாதம் கடந்துள்ள நிலையில் பல தடவைகள் கோரிக்கைகள் முன்வைத்தும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.
மீண்டும் சேவையை ஆரம்பிப்பது தொடர்பில் இலங்கை அரச போக்குவரத்துச் சேவையின் மன்னார் சாலை முகாமையாளர் மற்றும் வட பிராந்திய அத்தியட்சகர் ஆகியோர் அசமந்தப்போக்கை கடைப்பிடிக்கின்றனர்.
எனவே இடைநிறுத்தப்பட்ட சேவையை உடன் நடைமுறைப்படுத்த வேண்டும். தவறும் பட்சத்தில் பாடசாலை நிர்வாகத்தினர் இணைந்து எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடுவோம் என பாடசாலை நிர்வாகம் குறிப்பிட்டுள்ளது. (ச-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகை திருட்டு பெண் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 19

8 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆறரைப் பவுண் நகைகளைத் திருடிய சந்தேகத்தில் 24 வயதான இளம் குடும்பப்பெண் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொன் கந்தையா வீதியில் உள்ள வீடொன்றிலேயே நேற்றுமுன்தினம் இந்த நகைகள் களவாடப்பட்டுள்ளன. அதே வீதியில் அருகில் இருந்த நட்பு ரீதியான குடும்பத்தினராலேயே நகைகள் களவாடப்பட்டுள்ளதாகப் பொலிஸ் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

வேலை நிமித்தமாக வெளியில் சென்றிருந்த வீட்டின் உரிமையாளர் பிற்பகல் 1 மணியளவில் வீட்டுக்குத் திரும்பியிருந்தபோது வீட்டின் கதவு உடைக்கப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது. உள்ளே சென்று பார்த்தபோது அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த நகைகள் களவாடப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மாலை 4.30 மணியளவில் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. உடனடியாக விசாரணையில் இறங்கிய பொலிஸ் குழுவினர் ஒரு மணித்தியாலத்துக்குள் சந்தேகநபரைக் கைது செய்து, நகைகளையும் மீட்டுள்ளனர்.

தனியார் நிதி நிறுவனத்தில் தாலிக்கொடியை அடகு வைத்து 3 இலட்சம் ரூபா பணத்தைப் பெற்றுள்ளனர். அதில் 2 இலட்சத்து 92 ஆயிரம் ரூபா பணத்தை மீட்டுள்ளதுடன் மிகுதி நகைகளைப் பிறிதொரு வீட்டின் பூச்சாடியின் கீழ் வைத்திருந்த நிலையில் பொலிஸார் மீட்டுள்ளனர். (அ-ஓ.26)

# புதூர் நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் விழா!

வவுனியா, ஜூன் 19

புதூர் நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழா இன்று நடைபெறவுள்ளது காலையிலிருந்து விசேட பூசைகள் நடைபெறவுள்ளதுடன், இரவு பொங்கலும் இடம்பெறும். பொதுமக்கள் தங்களது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவதற்கான சகல ஒழுங்குகளும் ஆலய நிர்வாகத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ஓ-110)

# கோதுமைமாவிலை அதிகரிப்பில்லை!

கொழும்பு, ஜூன் 19

சந்தையில் கோதுமைமாவின் விலை 40 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படும் விடயம் உண்மைக்குப் புறம்பானது என அத்தியாவசிய உணவுப்பொருள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கோதுமைமா இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் டொலரின் பெறுமதிக்கு அமைய கோதுமைமாவின் விலை தீர்மானிக்கப்படமாட்டாது எனவும் அந்தச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (ம)

## ரணிலுக்கு...

13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி, இணைந்த வடக்கு - கிழக்கில் அதிகபட்ச அதிகார பரவலாக்கலை மேற்கொள்ள அனைத்து நடவடிக்கைகளையும் உடனடியாக மேற்கொள்ளும்படியும் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ளும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அதற்கான அழுத்தத்தை வழங்கவேண்டுமென்றும் தமிழ்க் கட்சிகள் கூட்டாக வலியுறுத்தும் முயற்சியை ஆரம்பிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலைப்பாட்டை வலியுறுத்தி அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் கையெழுத்திட்ட கடிதமொன்றை இந்தியப் பிரதமர் மோடிக்கு விரைவில் அனுப்பிவைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளுடன், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி ஆகிய கட்சிகளையும் இணைத்து இந்தக் கடிதத்தை அனுப்பிவைக்க முயற்சி மேற்கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

இந்த விவகாரம் தொடர்பில் இரா.சம்பந்தன், மாவை சேனாதிராசா, க.வி.விக்னேஸ்வரன் ஆகியோருடன் பேச்சு நடத்தி, கடித விவகாரத்தை ஒருங்கிணைக்கும் பொறுப்பை த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரிடம் நிறைவேற்றுக்குழு ஒப்படைத்துள்ளது. (அ-ஓ.இ)

## திருத்தி வாசிக்கவும்

நேற்று (18.06.2023) ஞாயிற்றுக்கிழமை 12ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட **விக்கினேஸ்வரன் அபிநயன்** அவர்களின் மரண அறிவித்தலில் **சிவநேசன்** என்பதற்கு பதிலாக **அமரர் சிவநேசன்** என தவறுதலாக பிரசுரிக்கப்பட்டுள்ளது. இதனை **சிவநேசன்** என திருத்தி வாசிக்கவும்.

தகவல்:- குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 06 . 1935



மறைவு 17 . 06 . 2023

## கணபதிப்பிள்ளை அன்னரத்தினம்

இணுவில் மேற்கு இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை அன்னரத்தினம் கடந்த (17.06.2023) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாத்துரை பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், பொன்னம்பலம் இலச்சுமிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற பொன்னம்பலம் கணபதிப்பிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரியர் - யா/இணுவில் மத்திய கல்லூரி) யின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற பவன் (பரிஸ்), பிரபா, கீதா, உமேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், மாதினி (கனடா), காலஞ்சென்ற சிவகுமாரன் (கனடா), பாலகிருஷ்ணன் (கனடா), சிவநந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும், வேணுகாசினி (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), கோபிசன் (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), சுவர்ணபவன் (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான சபாரத்தினம், விமலரத்தினம், விஜயரத்தினம், நிர்மலாதேவி, சிவசம்பு ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற இராசையா, ராஜபூபதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.06.2023) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இணுவில் மேற்கு,
இணுவில்.

077 525 0955

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 40...)

# 31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த (22.05.2023) திங்கட்கிழமை சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

## அமரர் நாகலிங்கம் பரமசிவம்

(ஓய்வுபெற்ற கிராம சேவகர்)
(அல்லாரை, தான்தோன்றி தாழையடி கண்ணகை அம்மன் ஆலய தர்மகர்த்தா)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (19.06.2023) திங்கட்கிழமை காலை 06.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறுகின்றது.

வீட்டுக்கிருத்திய நிகழ்வு 21.06.2023 புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பத்தினரும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**தயவு செய்து இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

எங்கள் குடும்பத்தின் ஆருயிர்த் தலைவராய் பேரன்பின் பாத்திரமாய் சுடரொளியாய் விளங்கிய நாகலிங்கம் பரமசிவம் அவர்களின் மரணச் செய்தி கேள்வியுற்றுப் பல வழிகளிலும் ஆறுதல் கூறி உதவி புரிந்தோருக்கும், இல்லத்திற்கு வந்து அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறியோருக்கும், ஈமக்கிரியைகளிலும் இறுதி ஊர்வலத்திலும் கலந்து கொண்டவர்களுக்கும், உள்-வெளி நாடுகளிலிருந்து அனுதாபச் செய்திகளை தொலைபேசி வாயிலாகவும், கடிதமூலமாகவும் அறிவித்து எமது துயரில் பங்குகொண்ட அன்பு உள்ளங்களுக்கும், மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் மற்றும் பதாகைகள், வெளியிட்ட அனைத்து அன்பு உள்ளங்களுக்கும், எமது தலைவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்தபோது வைத்தியசாலையில் வேண்டிய சிகிச்சைகளை வழங்கி சகல ஆதரவையும் நல்கிய வைத்தியர்கள், தாதியர்கள், உத்தியோகத்தர்கள், தொழிலாளிகள் அனைவருக்கும் ஆற்றொணாத் துயர மத்தியில் நாவெழா நிலையில் பணிவன்புடன் நன்றி நவில்கின்றோம்.

மீசாலை வடக்கு,
மீசாலை.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பற்றியெரிந்த...

எனினும், விரைந்து செயற்பட்ட இராணுவத்தினர், தீப்பரவலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். இந்த விபத்து மின்னொழுக்குக் காரணமாக ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ,இ)

## கம்மன்பில...

உதய கம்மன்பில தலைமையிலான குழுவினர் நாளைமறுதினம் புதன்கிழமை குருந்தூர்மலைக்கு வருகை தரவுள்ளனர். குருந்தூர் விகாரைக்கு அதிகளவான காணிகள் தொல்பொருள் திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் கேள்வி எழுப்பியமை சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. இதனையடுத்து தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளரும் பதவி விலகியிருந்தார். இவ்வாறானதொரு நிலையிலேயே கம்மன்பில குருந்தூர்மலைக்கு வருகை தரவுள்ளதாகத் தெரிவித்திருந்தார். அவரது வருகை தொடர்பில் கேட்டபோது கட்சித் தலைவர்கள் தெரிவித்தமை வருமாறு,

**செ.கஜேந்திரன்**
**தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி**

2021 ஆம் ஆண்டு அகழ்வாராய்ச்சி முன்னெடுக்கப்படவுள்ளமையை அறிந்து நாம் போராட்டம் நடத்தினோம், கட்டுமானப் பணிகள் நடைபெறாது, வரலாற்றை ஆய்வு செய்யும் பணி மாத்திரமே நடக்கும் என்று கூறினார்கள். கொரோனாக் கட்டுப்பாட்டுக்காலத்தில் இராணுவத்தின் உதவியுடன் இரகசியமாக பிரமாண்டமான தாதுகோபுரம் அமைத்தார்கள். ஆதிசிவன் வழிபாடு இடம்பெற்றுவந்த அந்த இடத்திலே அகழ்வுப் பணி என்று அங்கிருந்து அனைத்து விக்கிரகங்களையும் அகற்றி தாதுகோபுரத்தை அமைத்திருக்கின்றார்கள். இது சட்டவிரோதமான கட்டடம். இங்கு முரண்பாடு ஏற்பட்டு நீதிமன்றத்துக்குச் சென்று கட்டுமானங்கள் அமைக்கவேண்டாம் என்ற கட்டளையும் இருக்கின்றது. இதற்கிடையில் தொல்பொருள் திணைக்களம் 300 ஏக்கர் காணிகளை தங்கள் அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தி சுவீகரித்திருக்கின்றது. எங்கள் போராட்டங்களால் அதைவிடுவிக்க நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இந்தக் காணிகளை மக்களிடம் மீள ஒப்படைப்பதாக 2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19ஆம் திகதி வவுனியாவில் வைத்து உத்தரவிட்டிருந்தார் ஜனாதிபதி ரணில். ஆனாலும் எதுவும் நடக்கவில்லை. இப்போது தொல்பொருள் திணைக்களத் தலைவரை குறைகாண்பதுபோல் சில விடயங்களை ரணில் பேசியிருக்கின்றார். சிங்களத் தரப்பில் எதிர்ப்பு வெளியிடப்பட்டதும் மக்களிடம் காணிகளை மீள ஒப்படைக்கப்போவதில்லை என்று ரணில் குறிப்பிட்டுள்ளார். நாட்டைக் கொள்ளையடித்தவர்கள் என்று மக்கள் முன்பாக செல்ல முடியாத அரசியல்வாதிகள் சிங்கள இனவாதத்தை மீண்டும் உசுப்பேத்துவதன் ஊடாக தங்கள் வாக்குகளை நிரப்ப முயல்கின்றார்கள். அதன் வெளிப்பாடே கம்மன்பிலவின் வருகை. அவர் எங்கும் செல்லலாம். அவர் அங்கு செல்கின்றார் என்பதற்காக தமிழர்கள் எல்லாம் அடங்கியொடுங்கி அஞ்சி இருக்கமாட்டார்கள். தமிழர்களுடைய பூர்வீக நிலத்தில் சட்டபூர்வமற்ற முறையில் அமைக்கப்பட்டு இருக்கின்ற, தாதுகோபுரத்துக்கு நாங்கள் எதிர்ப்பை வெளிக்காட்டாமல் இருக்கப்போவதில்லை. அவர் பார்வையிட்டு அந்த விகாரை அமைப்பு சட்டவிரோதமானது என உணர்வாராக இருந்தால் ஆரோக்கியமாக இருக்கும். இல்லை வெறி கொண்டு தமிழர்களினுடைய பூர்வீக நிலத்தை ஆக்கிரமித்துவிட்டு கட்டப்பட்ட தாதுகோபுரத்தை தங்களுடைய வரலாற்று பரம்பரியம் என்று பொய்களைச் சொல்லப் போனால் அது இனங்களுக்கு இடையே இடைவெளிகளைத் தான் உருவாக்கும்.

**செல்வம் அடைக்கலநாதன் - ரெலோ**

தமிழர்களின் பூர்வீக நிலங்களை அபகரிக்கின்ற செயற்பாட்டின் ஓர் அங்கம் இது. தென்னிலங்கை அரசியல்வாதிகள் ஒவ்வொருவரும் தமது வாக்குகளைப் பெருக்குவதற்கு இதனைத் துரும்புச் சீட்டாக எடுத்துள்ளார்கள். இவர்கள் வந்து வந்து சென்று இதனை பெரிதுபடுத்துவதற்கு நாங்களும் சும்மா இருக்க முடியாது. ஏதாவது எதிர் நடவடிக்கைகளை எடுத்தாகவேண்டும். இவர்களுடைய வருகை குருந்தூர்மலையைத் தங்களுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவேண்டும் என்ற கள்ள நோக்கம் தான்.

**சுரேஷ் பிரேமச்சந்திரன் - ஈ.பி.ஆர்.எல்.எப்.**

உதய கம்மன்பில இனவாதி. இலங்கை சிங்களவருக்குரிய நாடு என்பதைத் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருபவர்களுள் ஒருவர். தேர்தல்கள் இடம்பெற இருப்பதால் சிங்கள மக்களுக்கு படம் காட்டி பௌத்தத்தை பேணிப்பாதுகாப்பது போல சோடிப்பதற்காக அவர் வருகை தரலாம். முதலில் சரத்வீரசேகரவும் வந்து சென்றவர். அதேபோல இவரும் இங்கே வந்து சென்று சிங்களப் பத்திரிகைகளுக்கு ஏதும் சொல்லுவார். இனவாதத்தை கக்கி தமது வாக்கு வங்கிகளைப் பெருக்குவதற்கே இவர்கள் வருகை தருகின்றார்கள்.

**து.ரவிகரன் - இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி**

உதயகம்மன்பில போன்ற குழுவினர் இங்கே வந்து இனவாதத்தைக் கக்கிவிட்டுச் செல்வதை எங்களுடைய தமிழ் சமூகம் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாது. அதிகாரத்தைப் பயன்படுத்தி இவர்கள் மீண்டும் மீண்டும் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவது எம்மினம் மீதான இன்னொரு இன அழிப்பாகவே நாம் பார்க்கவேண்டும். தமிழ் பௌத்தம், சிங்களப் பௌத்தம் என பிரித்துப் பார்ப்பதற்கு முன்னரே எங்களுடைய சைவ சமயம் இங்கு இருந்ததற்கான சான்றுகள் காணப்படுகின்றன. தமிழ் பௌத்தம் என்று கூறி பௌத்த மதத்தை எங்களுடைய தமிழ் மக்கள் மீது திணித்து நீதிமன்றக் கட்டளைகளையும் மீறி பௌத்த வழிபாடுகளை மேற்கொள்வதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. சட்டவிரோத விகாரையை ஆதரிக்கவே கம்மன்பில வருகின்றார். நாங்கள் எங்கள் எதிர்ப்பைப் பதிவு செய்வோம்.

**த.சித்தார்த்தன் - புளொட்**

குருந்தூர்மலை தொடர்பாக சித்திரிக்கப்பட்டுள்ள வரலாறு உண்மைக்குப் புறம்பானது என அங்கே வருகை தர இருக்கின்ற கம்மன்பிலவுக்கும் தெரியும். சிங்கள மக்கள் மத்தியிலே இனரீதியான அல்லது மதரீதியான பிளவுகளை கூர்மைப்படுத்தி அதன் மூலம் தங்களுக்கு அரசியல் ஆதாயம் தேடுகின்ற செயற்பாடாகத் தான் நாம் இதனைப் பார்க்கவேண்டும். இவ்வாறான செயற்பாடுகள் சிங்கள - தமிழ் மக்களிடையே விரிசலை இன்னும் இன்னும் ஏற்படுத்துமே தவிர முரண்பாடுகளைக் குறைக்காது. இவ்வாறான செயற்பாடுகளைச் செய்கின்ற உதயகம்மன்பில போன்றவர்களைக் கண்டு நாம் ஆச்சரியப்படத் தேவையில்லை. இவ்வாறு செயற்படுவது நாட்டை இன்னும் அதலபாதாளத்துக்குள் தள்ளுமே தவிர எந்தவித அபிவிருத்தியையும் ஏற்படுத்தாது.

**வினோநோகராதலிங்கம் - ரெலோ**

இனவாதக் கட்சியினுடைய தலைவராக காணப்படுகின்ற அதே தருணம் விகாரைகளுக்கு அருகாமையில் சிங்களவர்கள் மட்டுமே இருக்கவேண்டும் என்ற கருத்துக்களைக் கொண்ட அரசியல்வாதி கம்மன்பில. குருந்தூர்மலையைச் சூழ சிங்களவர்களை மாத்திரமே குடியேற்றவேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். இது குருதிக்களரியை ஏற்படுத்தும் விடயம். எரிகின்ற விளக்கில் எண்ணெய்யை ஊற்றுவது போல பிரச்சினைக்குரிய விடயமாக மாறி இருக்கின்ற குருந்தூர்மலைக்கு உதயகம்மன்பில வருவதானது, சிங்கள மக்களை உசுப்பேத்தி அவர்களுடைய வாக்குகளைப் பெறுவதற்கே. தமிழ் மக்களின் பிரதிநிதிகள் குருந்தூர்மலைக்குச் செல்லும்போது பொலிஸார் பல தடைகளை விதிக்கின்றனர். ஆனால், தென்னிலங்கை அரசியல்வாதிகளுக்கு மாத்திரம் விசேட அனுமதி வழங்கப்படுகிறது. அவருடைய வருகையை ஏற்க முடியாது. (அ-ஒ,5,125)

## தேர்தலுக்கு...

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமால்புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார். 'உள்ளூராட்சிமன்றத் தேர்தல் வேட்புமனுக்களை இரத்துச் செய்வதற்கு விசேட சட்டமொன்றை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றவேண்டும். நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட வெறும் பிரேரணையால் இவ்வாறானதொன்றை செய்துவிடமுடியாது' என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை - உள்ளூராட்சிசபைத் தேர்தலுக்கான பெரும்பாலான தபால் மூல வாக்குகள் அச்சிடப்பட்டு அரச அச்சகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ,இ)

## தங்க...

பாலசுப்பிரமணியம் தெரிவித்ததாவது:- அரசாங்கம் தங்கத்தின் மீதான இறக்குமதித் தடையை நீக்கி தங்கத்தின் விலையைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். தற்போது ஒரு பவுண் (24 கரட்) ஒரு இலட்சத்து 63 ஆயிரம் ரூபாவாகவும் (22 கரட்) ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகிறது.

இந்த விலை அதிகரிப்புக்கு தங்கத்தின் மீதான இறக்குமதித் தடையும் காரணம். இதனால் பழைய நகைகளைக் கொள்வனவு செய்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதுடன் வெளிநாட்டிலிருந்து வருபவர்களும் சிறிய நகைகளையே கொள்வனவு செய்கின்றனர். சர்வதேசச் சந்தைக்கும் இலங்கைக்குமிடையே பவுணின் விலையில் 8 ஆயிரம் ரூபா வேறுபாடு காணப்படுகிறது.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக நகைத் தொழில் வீழ்ச்சியடைந்துள்ளது. நாங்கள் அரசாங்கத்துடன் தொடர்பாடல்களை மேற்கொண்டு வருகிறோம். எனினும் செயற்பாட்டளவில் எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை - என்றார். (அ-ஒ,6)

## கூட்டணிக்கு...

கூட்டம் வவுனியாவில் நேற்றுக்காலை இடம்பெற்றது. இதன்போது கட்சியின் நிர்வாகக் குழு தெரிவு செய்யப்பட்டது. ஜனநாயகத் தமிழ்க் தேசியக் கூட்டணியின் செயலராக புளொட்டைச் சேர்ந்த ஆர்.ராகவன், ஊடகப் பேச்சாளராக ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தேசிய அமைப்பாளராக ரெலோவின் நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், கட்சியின் பொருளாளராக ஜனநாயகக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் க.துளசி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இணைத்தலைவர்களாக செல்வம் அடைக்கலநாதன், த.சித்தார்த்தன், க. சுரேஷ் பிரேமச்சந்திரன், என்.சிறிகாந்தா, சி.வேந்தன் ஆகியோரும் செயற்படுவர் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ,18,110)

## இனப்...

விக்கிரமசிங்கவோ அல்லது சம்பந்தனோ எடுத்தவுடன் வழங்கமுடியாது - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பிரிட்டன் மற்றும் பிரான்ஸுக்குப் புறப்படுவதற்கு முன்னர் சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணலில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். 'இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் பேச்சு தொடர்பில் நம்பிக்கையீனத்தை உங்களுடனான சந்திப்பின் பின்னர் குறிப்பிட்டிருந்தார். இது தொடர்பில் என்ன கூறுகின்றீர்கள்' என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு,

'அரசியல் தீர்வு பேச்சு முன்னெடுக்கப்படும் நிலையில் ஆளும் தரப்பிலுள்ள கட்சிகளிடத்திலிருந்தும் எதிர்ப்புவரும். எதிரணியிலுள்ள கட்சிகளில் இருந்தும் எதிர்ப்புக்கள் வரும். தற்போதைய நாடாளுமன்றம் ஆளும் தரப்பிலும், எதிரணியிலும் பல கட்சிகளைக் கொண்டு அமைந்துள்ளது. அரசியல் தீர்வு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மாத்திரமல்ல, அவர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்பி வைத்த மூவின மக்களுக்கும் உரியது. எனவே தீர்வு விவகாரப் பேச்சு வெற்றியடையும் என்று நம்புகின்றேன். சகல கட்சிகளுடனும் நாடாளுமன்றத்துக்குள்ளும் பேசி வெளியிலும் பேசி அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வை விரைந்து வழங்க நடவடிக்கை எடுத்துள்ளேன்' - என்றார் ரணில். (அ-ஒ,5,22)

## அத்தியாவசிய...

வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ வெளியிட்டுள்ளார்.

நுகர்வோர் விவகார அதிகாரசபைச் சட்டத்தின் பிரகாரம், கோதுமை மா கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு முதல் அத்தியாவசியப் பொருளாக வர்த்தமானியில் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. சந்தையில் கோதுமை மாவின் விலை உயர்வைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-ஒ,இ)

## எரிபொருள்...

எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

இலங்கைபெற்றோலியக்கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையங்களில் ஒக்ரேன் 95 பெற்றோல் உட்பட வேறு எந்த பெற்றோலியப் பொருள்களுக்கும் தட்டுப்பாடு இல்லை என ருவிற்றர் பதிவொன்றில் அமைச்சர் தெரிவித்துள்ளார். நாடளாவிய ரீதியில் ஒக்ரேன் 95 பெற்றோலுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக வெளியான செய்தியைத் தொடர்ந்தே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார். (அ-ஒ,இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்புற நடைபெற்ற மணிவிழா நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 19
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் - விரிவுரையாளர் எனப் பல தளங்களில் பணி செய்த சரா. புவனேஸ்வரனின் மணிவிழா நேற்று ஞாயிறு காலை 9.30 மணிக்கு நல்லூர் சயன்ஸ் அக்கடமி மண்டபத்தில் நடைபெற்றது.






லயன் வை.தியாகராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஜனாதிபதியின் மேலதிக செயலர் எல். இளங்கோவன், வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ், யாழ். மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் ம.பிரதீபன், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் ச.லலீசன் வவுனியா பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் மோகனதாஸ் உள்ளிட்ட பலர் வாழ்த்துரைகளை வழங்கினர்.
நிகழ்வில் ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கென சரா.புவனேஸ்வரனால் எழுதப்பட்ட ஐந்து நூல்கள் வெளியிட்டு வைக்கப்பட்டன.
மணிவிழா சபையினரால் பல்துறை வித்தகர் என்ற பட்டம் சரா.புவனேஸ்வரனுக்கு வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.
பல்வேறு ஆக்கங்களைத் தாங்கிய மணிவிழா மலரும் வெளியிட்டு வைக்கப்பட்டது. இதனை லயன் வை.தியாகராஜா, மேலதிக மாவட்டச் செயலர் ம.பிரதீபன், கலாசாலை அதிபர் ச.லலீசன் ஆகியோர் இணைந்து வெளியிட்டு வைத்தனர்.
விழா நாயகரின் பேரக்குழந்தை, நூலின் முதல் பிரதியை பெற்றுக் கொண்டது.
(ஒ-இ)





ஆனைக்கோட்டை மூர்த்த நயினார் ஆலயத் தேர்த்திருவிழா நேற்று முன்தினம் சனிக்கிழமை வெகுசிறப்பாக இடம்பெற்றது. (ஒ)


## தேவை

புத்தூரில் அமைந்துள்ள பூங்கனிச் சோலைக்கு பெண் உதவியாளர் தேவை. சம்பளம் நேரில். (CR 40158)(k-1)

077 382 9451, 076 639 7826

## DHL துரித பொதிகள் சேவை



▲ சகல நாடுகளுக்கும் கடிதங்கள், பொதிகள் அனுப்பிட முடியும்.
▲ மருந்து பொருட்கள், பழ வகைகள், எண்ணெய் வகைகள் மற்றும் இதர பொருட்கள் எம் ஊடாக அனுப்பிட முடியும்.
▲ 11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட சலுகைகள்

திருமுருகன் கொம்நெற்
321, K.K.S. வீதி,
(முட்டாஸ் கடைச் சந்தி), யாழ்ப்பாணம். T.P: 0777 55 45 28

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் 4 பரப்புக் காணி விற்பனைக்கு.
* கல்வியங்காட்டு சந்தியில் இருந்து 1 1/2 km தூரத்தில் பருத்தித்துறை வீதியில் இருந்து 1200 m தூரம் (இலங்கை நாயகி அம்மன் கோயில் முன் வீதி).
* கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் மடத்தடியில்.
* இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி.
* ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சத்தி ஐம்பது ஆயிரம் ரூபாய் (250,000/=) மட்டும்.

தொடர்பு: 076 436 5814
076 739 0413

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 24 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
* பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
* புத்தூரில் தண்ணீர் தாங்கி அருகாமை (நிலப்பரப்பு)
* மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
* வியாபார நிலையங்கள் திருமண மண்டபங்கள் வீடு அமைப்பதற்கு உகந்த இடம்.
* பார்வையிடும் நேரம் காலை 06 மணிமுதல் மாலை 06 மணிவரை.
* நன்னீருற்று.
* ஒரு பரப்பின் விலை 300,000/= (மூன்று லட்சம்) மட்டும்.

தொடர்பு: 076 7336 047, 076 7558 606


## மரண அறிவித்தல்

பிறப்பு
04
04
1949



இறப்பு
16
06
2023

## திரு. நடராசா வாமசிவன்

யாழ்ப்பாணம் அரியாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திரு. நடராசா வாமசிவன் கடந்த (16.06.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி நடராசா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சிவகுரு தம்பதிகளின் அன்பு மருமகனும், மாலதியின் (மாலா) பாசமிகு கணவரும், தக்ஷாயினி, விஷ்னுவர்த்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், துவாரகன், காயத்திரி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், டீபாஞ்சலி, கிஷோபன், தவிஷா ஆகியோரின் பாசமிகு பேரனும், கமலநாயகி, வாமதேவன், வாமபாகன், தேவநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான பிரபாவதி, உமாகாந்தன் மற்றும் சிவகாந்தன், கிருஷ்ணகாந்தன், காலஞ்சென்றவர்களான துரைசிங்கம், மாலினி மற்றும் உமாபதி, பாலசுந்தரம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு இன்று (19.06.2023) திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று முற்பகல் 10.00 மணிக்கு அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு தகனத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இல. 66/1, ஆனந்தன் வடலி வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 285 8734,
077 267 4802

(CS/50891)AH-1

## நயினாதீவு இந்து கலாசார அபிவிருத்தி சபை

நயினாதீவு நாகபூஷணி அம்பாளின் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு நயினாதீவு இந்து கலாசார அபிவிருத்திச் சபையினரால் வழமை போன்று கொடி ஏற்றம் முதல் தெப்ப திருவிழாவரையும் இரவு பகலாக குடிநீர், கோப்பி, பால் கோப்பி, குளிர்பானம் ஆகியவற்றை வழங்குவதெனவும், தேர்த் திருவிழா அன்று சிறப்பான முறையில் தயாரிக்கப்பட்ட அருட் பிரசாதம் பிளாஸ்ரிக் கிண்ணத்தில் பொதி செய்யப்பட்டு அடியார்களுக்கு வழங்குவது எனவும் அதற்கான சகல ஒழுங்குகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளது என்பதனை பணிவுடன் அறியத் தருகின்றோம்.
தாகசாந்திப் பணிக்கு பணம், பொருள் வழங்க விரும்பும் அடியார்கள் யாழ். பூபாலசிங்கம் புத்தகசாலையில் வழங்கி பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

நிர்வாகத்தினர்
இந்து கலாசார அபிவிருத்திச் சபை,
நயினாதீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.06.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.